**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**OS No. 249/2014**

**Witness DW 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தம்பிதுரை | சாதி | |
| த/பெ | அங்கப்பன் | மதம் | |
| ஊர் | | தொழில் | |
| மாவட்டம்; | | வயது | |
| | | தேதி | 09.07.2024 |

இன்று (09.07.2024) சாட்சி சத்திபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**6 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது தாத்தாவின் பெயர் குப்புசாமி என்றால் சரி. எனது தாத்தாவிற்கு 3 பிள்ளைகள் என்றால் சரி. அவர்கள் பெயர் அங்கப்பன் நாராயணன் மற்றும் தனபால் என்றால் சரி . அங்கப்பன் என்பவருக்கு நான் பாக்கியவதி மற்றும் ராதாகிருஷ்ணன் ஆகியோர் பிள்ளைகள் என்றால் சரி. இந்த வழக்கினை நாராயணன் என்பவரது மனைவியான 2ம் வாதியான தனலட்சுமி என்பவரும் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரி. தயாநிதி என்பவர் தனபால் என்பவரது மகன் அவர் இந்த வழக்கில் 3 வது வாதியின் இவ்வழக்கு சொத்துக்கள் அனைத்தும் பாக பிரியாத கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்றால் சரி . 1 மற்றும் 2 வது வாதிக்கு நாராயணசாமி

என்பவர் எழுதிய உயிலும் 3 ம் வாதிக்கு தனபால் என்பவர் எழுதிய உயிலும் மோசடியாக அவர்களாகவே தயாரித்து கொண்ட உயில்கள் என்று சொன்னால் இல்லை. கூட்டுக் குடும்ப சொத்தில் எனக்கு பாக்கியவதி ராதாகிருஷ்ணன் ஆகியோருக்கு அங்கப்பன் என்பவர் வாரிசுகள் என்ற அடிப்படையில் எங்களுக்கு 3 ல் 1 பாகம் உரிமை உள்ளது என்று சொன்னால் சரி . பாக்கியவதி என்பவரது வாரிசுகள் தான் 6 முதல் 9 பிரதிவாதிகள் என்றால் சரி . நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் 5 ம் பக்கத்தில் 16 வது பத்தியில் இறந்த பங்காளி அங்கப்பனுக்கு சேர வேண்டிய மீதமுள்ள 3 ல் 1 பாகம் அவரின் மகன்களான 1, 2 பிரதிவாதிகளான தம்பிதுரை ஆகிய நானும் ராதாகிருஷ்ணனும் மற்றும் மகள் பாக்கியவதியின் வாரிசுகளான 6 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் அடைய வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி . அதனால் நான் 6 முதல் 9 வரையிலான பிரதிவாதிகளுக்கு அவர்களின் தாத்தாவின் சொத்தில் பாகம் உள்ளது என்பதனை ஒப்பு கொண்டுள்ளேன் என்றால் சரி. 6 முதல் 9 பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை . பாக்கியவதி என்பவருக்கு சொத்து உரிமை உள்ளது என்று கூறி நீதிமன்ற கட்டணம் செலுத்தி இவ்வழக்கில் ஆஜராகியுள்ளனர் என்று சொன்னால் சரி.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram